பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 21 வியாழக்கிழமை [07-11-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 338

# கொழும்பு 'சார்க்' உச்சிமாநாடு காலவரையின்றி ஒத்திவைப்பு

## பிரேமதாஸா அரசுக்கு ஏமாற்றம்

கொழும்பு, நவம்பர் 7

இன்று கொழும்பில் ஆரம்பமாகவிருந்த 'சார்க்' உச்சி மாநாடு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

இந்த மாநாட்டை திட்டமிட்டபடி நடத்த ஜனாதிபதி பிரேமதாஸா தலைமையிலான ஸ்ரீலங்கா அரசு இறுதி நேரம் வரை எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தன.

பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய நாடுகள் மன்றத்தின் (சார்க்கின்) 6ஆவது உச்சி மாநாடு இன்று தொடக்கம் மூன்று தினங்களுக்கு கொழும்பில் நடைபெறவிருந்தது தெரிந்ததே.

ஆனால் மாநாட்டில் பங்கு பற்ற இயலாது என்று பூட்டான் மன்னர் வான்சுக் அறிவித்ததை அடுத்து மாநாட்டைக் காலவரையறையின்றி ஒத்திவைக்கவேண்டிய நிலை ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

பூட்டான் மன்னரின் அறிவிப்பை அடுத்து, சார்க் அமைப்பின் தற்போதைய தலைவர் என்ற வகையில் மாலைதீவு ஜனாதிபதி

(3 ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீலங்கா அரசின் ஏமாற்றத்தை தணிக்க 3 தலைவர்கள் வருகை!

கொழும்பு, நவ. 7

சார்க் உச்சி மாநாட்டைச் சிறப்பாக நடத்த கொழும்பில் விரிவான ஏற்பாடுகளைச் செய்திருந்த ஸ்ரீலங்கா அரசு, மாநாடு குழம்பியதினால் ஏமாற்றமடைந்திருக்கிறது.

இந்த ஏமாற்றத்தைத் தணிப்பதற்காக — சமரசம் செய்யும் நோக்கில் — சார்க்கில் அங்கம் வகிக்கும் மூன்று நாடுகளின் தலைவர்கள் தமது திட்டப்படி கொழும்பு விஜயத்தை மேற்கொள்ள முடிவு செய்திருக்கின்றனர்.

சார்க் தலைவர்களுக்கு வழங்கவிருந்த வரவேற்பு இவர்களுக்கு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பங்களாதேஷ் பிரதமர் பேகம் காலிதா ஸியா, பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப், மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கையூம் ஆகியோரே கொழும்பு வருகை தருகின்றனர்.

பேகம் காலிதா ஸியா நேற்று மாலையே கொழும்பு வந்து சேர்ந்தார்.

இன்று காலை 8-15 மணிக்கு இந்தத் தலைவர்களுக்கு ஜனாதிபதி செயலகத்தில் வைத்து அரச வரவேற்பு அளிக்கப்படும்.

இன்று பிற்பகல் 8 மணியளவில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## சார்க் குழம்பியதற்கு இந்தியாவே காரணம்

கொழும்பு, நவ. 7

கொழும்பு 'சார்க்' மாநாடு திட்டமிட்டபடி நடத்தப்படாமல் ஒத்திவைக்கப்பட்டதன் பின்னணியில் இந்தியா செயற்பட்டிருக்கிறது என்று அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

மாநாடு ஒத்திவைக்கப்பட்டதற்குக் காரணம் இந்தியாவின் பிடிவாதமே என்று இலங்கை அதிகாரிகள் சிற்றத்துடன் கூறியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவின் நிர்ப்பந்தம் காரணமாகவே பூட்டான் மன்னர் கொழும்பு செல்ல மறுத்தார் என்பது வெளிப்படை என்றும் கொழும்புக்கான பி.பி.ஸி. செய்தியாளர் கிறிஸ் மொறிஸ் தெரிவித்திருக்கிறார்.

கொழும்பில் 'சார்க்' நடத்தப்படக் கூடாது என்பதில் ஆரம்பத்திலிருந்தே இந்தியா பெரும் அக்கறை கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய அமைதிப்படை இலங்கையின் வடக்கு, கிழக்கில் நிலை கொண்டிருந்த சமயம் —

அந்தப்படை எமது நாட்டில் இருக்கும்போது 'சார்க்' மாநாட்டைக் கொழும்பில் நடத்த முடியாது என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா அறிவித்ததும், அதனையடுத்து அந்த மாநாடு [illegible] தெரிந்தவையே.

[ 8 ஆம் பக்கம் பார்க்க]

### இந்தியத் தரப்பில் மறுப்பு

சார்க் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டாம் என்று பூட்டானை இந்தியா கேட்டுக்கொண்டது என்று கூறப்படுவது தவறான கருத்தாகும்.

புதுடில்லியில் வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் நேற்று செய்தியாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார்.

சார்க் அமைப்பில் உள்ள ஏழு நாடுகளின் தலைவர்களும் கலந்துகொள்ளும் உச்சி மாநாட்டின் மூலம் மட்டுமே சார்க் அமைப்பின் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள முடியும்.

ஒரு தலைவர் இம் மாநாட்டில் கலந்துகொள்ளாத பட்சத்தில் சார்க் நாடுகளிடையே உயர் நிலையின் கருத்துடன்பாடு காணப்படுவதில் உள்ள தீவிரம் குறைந்துவிடும்.

மாநாட்டில் ஒரு நாடு கலந்துகொள்ள முடியாத நிலையால் ஏற்பட்டுள்ள விளக்கங்களுக்கு கருத்துத் தெரிவிக்க நாம் விரும்பவில்லை.

— இப்படி அந்த அதிகாரி மேலும் சொன்னார். [உ-எ]

## முச்சந்தி முரளி



அப்ப......சாக்குப்போக்குச் சொல்லி சார்க்கைக் குழப்பிப் போட்டினம் எண்டு சொல்லுங்கோ......!

## தச்சன்காட்டில் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ. 7

பலாலி தச்சன்காட்டுப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நேற்று முன்தினமும், நேற்று அதிகாலையும் விட்டு விட்டு ஷெல் மற்றும் துப்பாக்கிச்சூட்டுத் தாக்குதல்களை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. [உ-5]

## ஊரடங்கு நீக்கம்

கொழும்பு, நவ. 7

கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி மற்றும் பூநகரி உதவி அரச அதிபர் பிரிவுகளில் அமுல் நடத்தப்பட்டு வந்த ஊரடங்குச் சட்டம் இன்று வியாழன் காலை 6 மணி முதல் நீக்கப்படுவதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது. [உ-எ]

## பள்ளிக்குடாவில் தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ. 7

பூநகரி—பள்ளிக்குடா பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமின் மீது விடுதலைப் புலிகள் நேற்று முற்பகல் பத்து மணியளவில் ஷெல் தாக்குதல்களை நடத்தினர். சேத விபரம் கிடைக்கவில்லை. [உ-5]

## ஓய்வூதிய வவுச்சர்கள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், நவ. 7

நேற்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்த 'லில்லி' கப்பலில் அக்டோபர் மாதத்துக்கான பென்சன் வவுச்சர்கள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இன்று யாழ். செயலகத்துக்கு அவை எடுத்துவரப்படும். உடனடியாக அவற்றைத் தரப்படுத்தி உரியவர்களுக்கு அனுப்பி வைக்கும் [illegible] ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது. [உ-5]

## லில்லி கப்பல் வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், நவ 7

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக்கொண்டு 'லில்லி' கப்பல் நேற்று முற்பகல் 10 மணிக்கு பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

பென்சன் வவுச்சர்கள் மற்றும் சில பொருள்கள் மட்டும் நேற்றுக் கப்பலில் இருந்து இறக்கப்பட்டன.

இந்தக் கப்பலில் சவர்க்காரம், தபால் பொதிகள் என

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீலங்காவின் கோரிக்கை பூட்டான் நிராகரித்தது!

உள்நாட்டுக் குழப்பம் ஏற்படும் ஆபத்துள்ளதால் மன்னர் வான்சுக் சார்க் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ள கொழும்பு வர முடியாது. பூட்டான் அமைச்சரவையின் விசேட கூட்டத்தில் இவ்வாறு முடிவு செய்யப்பட்டது.

மாநாட்டில் கலந்துகொள்வதில்லை என்ற முடிவை மாற்றும்படி ஸ்ரீலங்கா தரப்பில் விடுக்கப்பட்ட வேண்டுகோளை பரிசீலனை செய்ய பூட்டான் அமைச்சரவையின் விசேட கூட்டம் நேற்று இடம்பெற்றது.

அப்போதே இம்முடிவு எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

பூட்டான் தெற்குப் பகுதியில் நேபாளி வம்சாவளியினர் மத்தியில் பதற்றம் நிலவுவதாகவும் —

மன்னர் வான்சுக் கொழும்பு செல்லும் தருணத்தைப் பயன்படுத்தி அப்பகுதியில் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் கலவரத்தை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் காரணத்தை முன்வைத்தே நேபாள பிரதமர் கிரிஜா பிரசாத் கொய்ராலாவும் கொழும்புப் பயணத்தை ரத்துச் செய்தார் என்றும் கூறப்படுகிறது. [உ-எ]

## நேரில் பூட்டான் மன்னரை அழைக்கவில்லையாம்!

திம்பு, நவ. 7

கொழும்பு சார்க் உச்சி மாநாட்டில் பூட்டான் மன்னர் வான்சுக் கலந்து கொள்ள மறுப்புத் தெரிவித்ததற்கு இன்னொரு காரணமும் கூறப்படுகிறது.

உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளும்படி சார்க்கின் மற்றைய உறுப்பு நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், மாலைதீவு ஆகியவற்றிற்கு இலங்கை வெளியுறவு அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் நேரில் சென்று அந்த நாடுகளின் தலைவர்களிடம் அழைப்பைக் கையளித்திருந்தார்.

ஆனால் திரு. ஹேரத் பூட்டானின் தலைநகருக்கு நேரில் சென்று அழைப்பைக் கையளிக்கவில்லை. அதனால் ஆத்திரம்கொண்டு பூட்டான் மன்னர் கொழும்பு செல்ல மறுத்துவிட்டார் என்று சார்க் வட்டாரங்களில் கூறப்பட்டதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. [உ-எ]

## பிரதமர் நரசிம்மராவின் கொழும்பு வருகை ரத்து!

கொழும்பு, நவ. 7

கொழும்பு 'சார்க்' மாநாடு ஒத்திவைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டதை அடுத்து இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தமது கொழும்புப் பயணத்தை ரத்துச் செய்துவிட்டார் என்று புதுடில்லியில் தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்புக் காரணம் கருதி கொழும்பு உச்சி மாநாட்டில் முற்றாகக் கலந்துகொள்ள வேண்டாம் என்று தமது பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்த ஆலோசனையை மீறி, மாநாட்டில் ஒரு நாள் மட்டுமே கலந்துகொள்ள இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் சம்மதம் தெரிவித்திருந்தார் என்று ஆஸ்திரேலிய வானொலி குறிப்பிட்டது. [உ-எ]

## ஸ்ரீலங்கா கவலை தெரிவிப்பு

கொழும்பு, நவ. 7

சார்க் உச்சிமாநாடு ஒத்திவைக்கப்பட்டது தொடர்பாக இலங்கை வெளியுறவு அமைச்சு கவலை தெரிவித்து நேற்று பத்திரிகை அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

"பூட்டான் மன்னர் மாநாட்டுக்கு வராத காரணத்தினால் அவர் தமது அதிகாரபூர்வ பிரதிநிதி ஒருவரை மாநாட்டுக்கு அனுப்பி வைக்கவேண்டும் என்று எங்களின் அரசு ஆலோசனை தெரிவித்தது.

இந்த ஆலோசனை உறுப்பு நாடுகளின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

ஆனால் ஏழுநாடுகளின் தலைவர்களும் உச்சிமாநாட்டில் கலந்துகொண்டால் தான் கலந்துகொள்ளப்போவதாக இந்தியா வலியுறுத்தியது.

இதனால் இது விஷயத்தில் ஒருமித்த கருத்து ஏற்பட முடியாது போயிற்று

(3 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அ. குமரகுரு எழுதிய ஓர் ஆய்வு நூல் இறந்தபின் எங்கு செல்கிறோம்' எல்லா பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும் விலை ரூ. 18/- [18674]

### மணப்பெண் தேவை

பிரான்சில் பிரஜா உரிமையுள்ள 34 வயதுடைய புரட்டாதி நட்சத்திரம் 12 செவ்வாய், மற்றும் 32 வயதுடைய உத்திரட்டாதி நட்சத்திரம் இரு மணமகன்களுக்கு நல்ல குடும்பத்தைச் சேர்ந்த அழகான மணப்பெண்கள் தேவை. விரைவில் பிரான்ஸுக்குச் செல்லக் கூடியவர்களாக இருக்க வேண்டும். தொடர்பு: இல. 364, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [18664]

### இலவச திருமண சேவை

பிரான்சில் தொழில் புரியும் 29 வயது மணமகனுக்கு மணமகள் தேவை (இலங்கை வந்து திருமணம்) சகல தரங்களில், சமயங்களில் மணமக்கள் உண்டு. இரு முத்திரைகளுடன் குறிப்பு: தொழில் சீதனம் எதிர்பார்ப்புடன் விண்ணப்பிக்கவும் ஞாயிறு காலையில் சந்திக்கலாம். து விமலா, 958/8, கே. கே. எஸ். வீதி, நச்சிமார்கோவிலடி, யாழ்ப்பாணம். [18677]

### தவறிவிட்டது

ஓட்டமடப்புமை முறிவு நெரிவு வைத்தியர் பெடிற் செல்லப்பா என்பவருடைய நீல நிற சூட்கேஸ் உடுப்புகளுடனும், மேரி மாதா படம், பெண்டிற்கு விஜயவிஜா, ஆகியோரது அடையாள அட்டைகளுடனும் ஓமந்தை மன்னார் முதல் பண்ணில் ஜெற்றிக்கு வரும்போது தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் செல்லப்பா, பிரதான வீதி, ஆவரங்கால் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (4376)

### விற்பனைக்கு

ரைப்ரைட்டர் Portable ஆங்கிலம், ரெமிங்டன், ஒலிம்பியா, பிறதர் மற்றும் ரைப்ரைட்டர்கள் உடன் விற்பனைக்கு உண்டு (விற்பனைக்குப் பின் உத்தரவாதம் உண்டு) பியூரோ, 39/17 மின்சார நிலைய வீதி 3ஆம் ஒழுங்கை. யாழ்ப்பாணம். (இ/0780)

### தேவை

றப்பர் ஸ்ரம்ப் [Rubber Stamp] செய்தில் அனுபவமுடையவர்களும், வேலை பழக ஆர்வமுள்ள G C E (O/L) சித்தியடைந்த இருபலரும் நேரில் வரவும். செல்வம் ஆர்ட்ஸ், காங்கேசன்துறை வீதி, சுன்னாகம். [18680)

### திருமண சேவை

சகல தொழில்களிலும் பணமகன்மார் உள்ளனர். எல்லா மதங்களிலும் திருமணத் தொடர்பு செய்து கொடுக்கப்படும். ஜாதகம், புகைப்படத்துடன் எல்லா நாட்களிலும் தொடர்பு கொள்ளலாம். துர்க்கா திருமண சேவை, வளர்மதி இல்லம் கே. கே. எஸ். வீதி, மல்லாகம் (4378)

The College of Higher Studies
ஆனைப்பந்தி.

தட்டச்சு, சுருக்கெழுத்து வகுப்புகள்

பகல் நேர வகுப்புகள் 9-00 — 1-00

சனி, ஞாயிறு வகுப்புகள் 9-00—6-00

அனுமதிக்கு முந்துங்கள். [கி-0778]

## 7ஆம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



தோற்றம்:
11 - 04 - 1972

மறைவு:
25 - 10 - 1984

திதி:
07 - 11 - 1991

**செல்வி நிபாலினி வீரசிங்கம்**
(பாப்பா)

எங்கள் அன்புத் தெய்வமே!
வானத்து நிலவு தேய்ந்து தேய்ந்து வளரும்
எங்கள் இதயவானில் நீ தேயாத நிலவம்மா
ஏழேழு பிறவி நாம் எடுத்தாலும்
மறப்போமா எங்கள் அன்புப் பாப்பாவை
உயிருள்ளவரை எங்கள் கண்ணீர்ப் பூக்களை
உம் பாதங்களுக்கு காணிக்கையாக்குவோம்

அன்புள்ள அப்பா, அம்மா,
பாசமுள்ள உடன் பிறப்புக்கள்
வீ. லெனின்ராஜா, வீ. பாமினி,
வீ. தீபராஜா, வீ. தயாழினி.

34/1. இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம். [18685]

## அறிவித்தல்

வட-இலங்கை மருத்துவ சபையிடம் மருந்துகளுக்கு விண்ணப்பித்த வைத்தியர்களும், வைத்தியசாலைகளும் City Medicals, Vanikaa Pharmacy ஆகிய ஸ்தாபனங்களில் தங்களுடைய மருந்து வகைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகிறார்கள்.

- தலைவர்,

வட-இலங்கை மருத்துவ சபை. [4381]

## தவறுக்கு வருந்துகிறோம்

4-11-91 அன்று மணமகள் தேவை என்ற தலைப்பில் எம்மால் கொடுக்கப்பட்ட விளம்பரத்தில் 'ஜலன்ட் பிறைற் பீச் இன்'' உரிமையாளரைச் சம்பந்தப்படுத்தி வெளியிட்ட தவறுக்காக மனம் வருந்துகிறோம். மேற்படி உரிமையாளருக்கும் விளம்பரத்தில் கண்டிருந்த தகவலுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதை அறியத் தருகிறோம்.

ABCDE, 328, நாவலர் றோட்,
யாழ்ப்பாணம். (18690)

## பதவி வெற்றிடங்கள்

1. ஆண்டு 04, 05 வகுப்புகளுக்கான (விஞ்ஞானம், ஆங்கிலம்) ஆசிரியர்கள்
2. ஆண்டு 06 முதல் 11 வரை கணிதம், தமிழ், விஞ்ஞானம், சமூகக்கல்வி, ஆங்கிலம் கற்பிப்பதற்கான ஆசிரியர்கள்.
3. பாலர் பாடசாலைக்கான ஆசிரியர்கள்.
4. அலுவலக உதவியாளர்கள்.

மேற்படி பதவிகளுக்கு பொருத்தமான தகுதிகள், அனுபவங்கள் உடையவர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்களை சொந்தக் கையெழுத்தில் கல்வித் தராதர சான்றிதழ்களின் பிரதிகள், அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும்.

**இருபாலைக் (எக்ஸ்பிறஸ்) கல்வி நிலையம்,**
இருபாலைச் சந்தி,
கோப்பாய் [4379]

## ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு:
17 - 07 - 1924

அழிப்பு:
19 - 10 - 1990

திதி: பிரதமை
07-11-1991



**அமரர் சபாபதி பரஞ்சோதி**

ஆண்டவன் பாதமடைந்து
ஆண்டொன்று சென்று விட்டதையா
அழியாத ஓவியமாய் நீங்கள்
அனைவரின் இதயங்களிலும் நிலைத்திருப்பீர்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

உமது பிரிவால் துயருறும்;
மனைவி, குடும்பத்தினர்.

குடோரேச் ஒழுங்கை,
மல்லாகம். [18678]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தபுராண கதாப்பிரசங்கம்

யாழ்ப்பாணம், நவ 7 கந்தஷஷ்டியை முன்னிட்டு, உரும்பராய் சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோவிலில் கந்தபுராண விரிவுரை, சங்கீத கதாப்பிரசங்கமாக நிகழ்த்தப்படும்.

திருமுருககிருபானந்தவாரியாரின் பிரதம சிஷ்யனான பிரசங்க பூஷணம் ந. கிருஷ்ணமூர்த்தி. இத்தொடர் சங்கீத கதாப்பிரசங்கத்தை இன்று தொடக்கம் 13ஆம் திகதி வரை பி. ப. 4.45 மணிக்கு ஆரம்பித்து நிகழ்த்துவார்.

நாளாந்தம் வெவ்வேறு அறிஞர்கள் கதாப்பிரசங்க நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து உரையாற்றுவர். [அ]

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் ச. அ. செபரத்தினம்**

தோற்றம்:
17 - 7 - 1928

மறைவு:
7 - 11 - 1988

உருவத்தால் உயர்ந்தமைபோல் நீதி நேர்மை
உள்ளத்தாலுயர்ந்தவனும்
கருமத்தாலுயர்ந்தவனும் சான்றோர் மெச்சுங்
கலையறிவாலுயர்ந்தவனும்
தருமத்தாலுயர்ந்தவனும் இன மத
சமரசத்தாலுயர்ந்தவனும்
பருவத்தால் பழுத்தாலன் குன்றின் குன்றிற்கு
இரையாகி உயர்ந்தவனும் இவனே யன்றோ

பிரிவால் துயருறும்;
மனைவி – தவம்
பிள்ளைகள் – குமார், சின்னோய்,
சத்தி, அமுதா, ஆனந்தி.

''பத்மா வாசா'',
சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு. (4382)

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
03
01
1909

உதிர்வு:
15
11
1982

**அமரர் வேலாயுதர் சின்னையா**

திதி: 07 — 11 — 1991

எம் இதயத்தில் என்றும் வாழும் அன்புத் தெய்வத்திற்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.

அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

31, புங்கன்குளம் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். (18679)

## மரண அறிவித்தல்

**ஆறுமுகம் நல்லதம்பி**
(நகை வியாபாரி, கன்னாதிட்டி)

ஆறுமுகம் நல்லதம்பி அவர்கள் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், சௌந்தரம்பிகை, மகேஸ்வரி, புவனேஸ்வரி, ஆறுமுகம், இந்திராணி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பூபாலசிங்கம், ஜெகநாதன், அருளையா, கணேசலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும், கேதீசன், மாலதி ஜெகநாதன், வசந்தி, கிருபாகரன், சிவநேசன், ஜெகதீசன், நிரஞ்சனா, ரேகினி, வதனி, துஷ்யந்தி, ராகவன், ஆகியோரின் அன்புப் பேரனும், ரமேஸ்ராஜின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 183, நாவலர் வீதியில் உள்ள அவரது இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. ஆறுமுகம்.
(மகன்)

[18693]

# உதயன்

## நேரில் வருக!

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பது சம்பந்தமாக அமைச்சர் தொண்டமான் சில முன் முயற்சிகளை எடுத்து வருகிறார். அரசாங்கத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் பேச வைப்பதற்கான ஒரு தளத்தை அமைப்பதே அவரது முயற்சியின் நோக்கம்.

திரு தொண்டமானின் கடிதம் ஒன்றுக்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா கடந்த வாரம் பதில் எழுதியுள்ளார்.

தமிழ் மக்கள் இராணுவ- பொருளாதார நெருக்குதலுடன் வாழும்போது சுதந்திரமான முறையில் பேச்சுக்களை நடத்துவது கடினமானது. பேச்சுக்களுக்கு முன்னோடியாக, ஓர் அமைதியான, நல்லெண்ணச் சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் என்று அக்கடிதத்தில் கூறப்பட்டிருக்கிறது.

யுத்தம் நடந்து கொண்டிருக்கும் போதே பேச்சுக்களை நடத்துவதில் தப்பில்லை என்றும், உலக அரசியல் சரித்திரத்தில் பல நாடுகளில், பல சந்தர்ப்பங்களில் யுத்தத்தின் மத்தியில் பேச்சுவார்த்தைகள் நடந்து, வெற்றி கண்டு சமாதானம் நிலைநாட்டப்பட்டதாகவும் தொண்டமான் அண்மைக்காலத்தில் வழங்கிய பத்திரிகைப் பேட்டிகளில் தெரிவித்திருக்கிறார்.

அமைச்சர் தொண்டமான் கூறும் உலக சரித்திர உதாரணங்களை நிராகரித்து விடுவதற்கு இல்லை. ஆனால் ஈழத்தமிழர் விவகாரத்தில் யுத்தம் போர் முனைகளில் மட்டும் நடக்கவில்லை. மக்கள் வாழும் பிரதேசங்களும் தாக்கப்படுகின்றன ஏன் மக்கள் வாழும் பகுதிகளே போர் முனைகளாக மாற்றப்படுகின்றன. அவ்வாறிருக்க, மக்களின் பாதுகாப்பைப் பற்றிச் சிறிதும் அக்கறை காட்டாது அரச படைகள் தாக்குதல்களை நடத்துகின்றன.

அது மட்டுமன்றி, மக்களைப் பட்டினி போட்டுக் கொல்லும் அளவுக்கு அரசாங்கம் தமிழ் மக்களுக்கு பொருளாதார நெருக்குதல்களைக் கொடுத்து வருகிறது. அந்த நெருக்குதல், உரிமைகள் எதையும் கேட்கக் கூடாது என்று அழுத்தம் போடுவதற்கு ஒப்பானதாகும்.

எனவே, தாம் அரசாங்கப் பிரதிநிதியாக இந்த முயற்சியில் இறங்கவில்லை என்றாலும் கூட, தமிழ் மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள அழுத்தங்களை நீக்குமாறு அரசாங்கத்தைக் கேட்க வேண்டிய ஒரு கடமை திரு. தொண்டமானுக்கு உண்டு.

பேச்சுக்கான முன்முயற்சியில் ஈடுபடும் ஒரு தரகர் என்ற வகையில் மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள அழுத்தங்களை நீக்குமாறு அவர் கோரலாம்.

அவ்வாறு அரசாங்கத்தைக் கேட்பதற்கு முன்னர், திரு தொண்டமான் வவுனியாவுக்கு இப்பால் தமிழ் மக்கள் படும் கஷ்டங்களை நேரில் வந்து பார்க்க வேண்டும். அப்போது தான் அவருக்கு அரசு தமிழர் மீது போட்டுள்ள அழுத்தங்களின் தன்மையை, சுமையை, அறிந்து கொள்ள முடியும்.

திரு தொண்டமான் இங்கு வந்து நேரில் நிலைமையைப் பார்த்தால், தமிழ் மக்கள் படும் அவலத்தை இலகுவில் புரிந்து கொள்வார். உண்மையை அவர் உணர்ந்துவிட்டால், தாமாகவே அழுத்தங்களை நீக்குமாறு அரசை உரத்த தொனியில் வலியுறுத்துவார் என்பது திண்ணம். அதற்கான துணிச்சல் அவரிடம் உண்டு. எனவே திரு. தொண்டமான் தமது முன்முயற்சியின் ஒரு கட்டமாக வவுனியாவுக்கு இப்பால் வருகை தருவது எல்லா வகைகளிலும் நற்பெறுபேறுகளைத் தரும் என நம்புகிறோம்.

# தென்னிலங்கையிலும் இனிமேல் சைக்கிள் பாவனை அதிகரிக்கும்!

கொழும்பு, நவ. 7

சைக்கிள் பாவனை வடபகுதியில் மட்டுமல்ல இனி தென்பகுதியிலும் அதிகரிக்கப் போகிறது. எரிசக்தித்துறை அமைச்சு இதற்கான நடவடிக்கையை எடுத்து வருகிறது.

பெற்றோல், டீசல் போன்றவற்றில் பெருமளவு தங்கியிருப்பதைக் குறைக்கும் முகமாக தென்னிலங்கையில் சைக்கிள் பாவனையை ஊக்குவிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சைக்கிள்களுக்கான மலிவான காப்புறுதித் திட்டம் ஒன்றையும் எரிசக்தி துறை அமைச்சு முதன் முறையாக இலங்கையில் அறிமுகப்படுத்த உள்ளது என்று அறிவிக்கப்படுகிறது.

ஆரம்ப நடவடிக்கையாக அடுத்த மாதம் முதல் றோயல், தேஸ்டன், மகாநாம விசாகா, சென். போல்ஸ் ஆகிய கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள், சைக்கிளில் செல்வதற்கு ஊக்குவிக்கப்பட உள்ளனர். அவர்களுக்கு சைக்கிள் செல்வதற்கான விசேடமாக சில ஒழுங்குகளை ஒதுக்கிக் கொடுத்து ஊக்கம் அளிக்கப்படும் என்று எரிசக்தி துறை அமைச்சைச் சேர்ந்த உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

[த]

# "தேசிய மீட்பு படை" பற்றி இந்து நாளிதழ் தகவல்

சென்னை, நவ. 7

இராமநாதபுரத்தைச் சேர்ந்த ரவி அல்லது ரவிச்சந்திரன், சேகர் என்றழைக்கப்படும் நாகராஜா ஆகியோரைத் தலைவர்களாகக் கொண்ட தேசிய மீட்புப் படை என்னும் அமைப்பு ஒன்றை தமக்கு ஆதரவாக விடுதலைப் புலிகள் அமைத்துள்ளனர் என்பது தெரிய வந்திருப்பதாக இந்து நாளிதழ் [4-11-1991] செய்தி வெளியிட்டிருக்கிறது.

கடந்த 23 ஆம் திகதி கோயம்பு தூரில் ஆட்டுப் பொன்னசி என்னுமிடத்தில் வைத்து 'கியூ' பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட சுசீந்திரன் மற்றும் ரவி ஆகியோரில் ரவி என்பவர் தேசிய மீட்புப்படை பற்றி மேலும் தகவல்களை வெளியிட்டுள்ளார் என்றும் அப்பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது.

1987 இல் விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. கிட்டுவுடன் தாம் யாழ்ப்பாணம் சென்று ஆயுதப் பயிற்சி பெற்றதாகவும் —

தாம் பயிற்சி பெற்று தமிழ்நாடு திரும்பியதும் மேலும் 25 பேரை ஆயுதப் பயிற்சிக்கென யாழ்ப்பாணம் அழைத்துச் சென்றதாகவும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்று கூறும் ரவி தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகள் ஆதரவுடன் யாழ்ப்பாணத்தில் பயிற்சி பெற்ற தமிழ் தேசிய மீட்புப் படையைச் சேர்ந்த சுசீந்திரன் உட்பட ஏனையவர்கள் தமிழ் நாட்டுக்கு வந்து கொண்டிருந்தபோது நடுக்கடலில் படகு கவிழ்ந்தது. அவர்களில் ஐவர் நீரில் மூழ்கினர், ஏனையவர்கள் தப்பிவிட்டனர். மற்றக் குழுவினர் யாழ்ப்பாணத்தில் இன்னும் உள்ளனர் என்று தமிழக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன என்று 'இந்து' செய்தி கூறுகிறது.

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

கொழும்பு, நவ. 7

இம்மாதம் 20 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஒன்பது மாகாண பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரிகளில் சேர்ந்து கல்வி பயிலவிருக்கும் மாணவர்களிடமிருந்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. (த-எ)

## கொழும்பு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

...யும் ஏனைய உறுப்பு நாடுகளின் தலைவர்களுடன் தொடர்பு கொண்டார்.

### பிரதிநிதியை ஏற்க மறுப்பு

பூட்டான் மன்னர் வரமுடியாத நிலையில் அவர் தனது சார்பில் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவரை மாநாட்டில் கலந்துகொள்ள அனுப்பலாம் என்ற ஸ்ரீலங்கா அரசின் யோசனையை பெரும்பாலான உறுப்பு நாடுகள் ஏற்க மறுத்து விட்டன.

ஏனைய ஆறு நாடுகளின் தலைவர்களும் கலந்துகொள்ளுவதாக இருந்தல் மட்டுமே, தாம் கலந்துகொள்ள முடியும் என்று இந்தியப் பிரதமர் தரப்பில் திட்டவட்டமாக மாலைதீவு ஜனாதிபதியிடம் தெரிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்தே மாநாட்டை ஒத்திவைப்பது என்ற முடிவை மாலைதீவு ஜனாதிபதி எடுத்தார் என்று அறிவிக்கப்பட்டது.

ஒத்திவைக்கப்பட்ட சார்க் உச்சிமாநாட்டை நடத்துவதற்கான புதிய திகதிகள் பற்றி உறுப்பு நாடுகளுடன் புதிதாகத் தாம் பேச்சுக்களை நடத்தவிருப்பதாகவும் மாலைதீவு ஜனாதிபதி அறிவித்திருக்கிறார். (உ-எ)

## ஸ்ரீலங்கா...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நடைபெறும் பொது வரவேற்பில் மூன்று தலைவர்களும் கலந்துகொள்வர்.

மாலை 5-30 மணியளவில் சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெறும் கலை நிகழ்ச்சிகளிலும் அவர்கள் பங்குபற்றுவார்கள்.

மூன்று தலைவர்களுடனும் தனித்தனியே ஜனாதிபதி பிரேமதாஸ இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுக்களை நடத்து[illegible] ...விக்கப்பட்டது.

## ஐ. தே. க. வருடாந்த மாநாடு

ஐக்கிய தேசியக் கட்சியின் 37 ஆவது வருடாந்த மாநாடு டிசம்பர் 15 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியில் பிளவு ஏற்பட்ட பின்னர் நடைபெறும் இம்மாநாட்டில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஸ்ரீலங்கா கவலை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஆகவே திட்டமிட்டபடி சார்க் உச்சிமாநாட்டை நடத்துவது சாத்தியமாகாது போயிற்று. இதை இலங்கை அரசு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறது.

இந்த மாநாட்டை எதிர்வரும் டிசம்பர் இறுதிக்குள் நடத்த இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கும்.''

இப்படி [illegible]றிக்கை [illegible]. [இ-எ]

# ஆனையிறவில் தொடர்ந்து ஷெல்தாக்கு!

யாழ்ப்பாணம், நவ. 7

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கும், நேற்றுப் பகலும் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

ஊரியான், இயக்கச்சிப் பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

இதேவேளை — பூநகரிப் பகுதியை நோக்கி நேற்று கடற்படைப் படகில் இருந்து பீரங்கித் தாக்குதலும் நடத்தப்பட்டதாகத் தெரியவருகிறது. இதனால் பொதுமக்களின் உடைமைகள் பல சேதமடைந்தன.

(உ-5-15)

# ஆசிரியர் ஒன்றியக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 7

தமிழீழ தேசிய ஆசிரியர் ஒன்றியப் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல்கள் இன்றும், நாளையும், நாளை மறுதினமும் நடைபெற உள்ளன.

யாழ்ப்பாணக் கோட்டத்துக்கான கலந்துரையாடல் இன்று 7ஆம் திகதி காலை 10 மணிக்கு சென். ஜோன்ஸ் கல்லூரியிலும் —

மருதனார்மடம் கோட்டத்துக்கான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2 மணிக்கு இராமநாதன் கல்லூரியிலும் —

பண்டத்தரிப்பு கோட்டத்துக்கான கலந்துரையாடல் நாளை 8ஆம் திகதி காலை 10 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும் —

தென்மராட்சிக் கோட்டத்துக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் 9 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு டிறிபேர்க் கல்லூரியிலும் நடைபெறும்.

தமிழீழ தேசிய ஆசிரியர் ஒன்றியத்தின் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலை, கொத்தணிப் பிரதிநிதிகளையும் —

தமிழீழ மாணவர்களின் கல்வி, சமூக மேம்பாட்டில் அக்கறை உடைய அதிபர்கள், கொத்தணி அதிபர்கள் ஆகியோரையும் — உரிய கோட்டங்களுக்கான கூட்டங்களில் கலந்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

[இ]

## சார்க் குழம்பியதற்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

'சார்க்' தொடர்பாக ஜனாதிபதி பிரேமதாஸா கூறிய இக்கருத்துக்கள் இந்தியாவுக்கு அந்தக்கட்டத்திலேயே எரிச்சல் ஊட்டியதாகக் கூறப்படுகிறது.

அதற்குப் பின்னர் இந்தியப் படைகளை எதிர்த்துப் போராட விடுதலைப் புலிகளுக்கு ஜனாதிபதி பிரேமதாஸா ஆயுதம் வழங்கியதாக வெளியான குற்றச்சாட்டு —

'ஆகாசவாணி' செய்தியாளர் கருப்பு சாமியை இலங்கையை விட்டு வெளியேற்றியமை —

போன்ற விடயங்கள் இந்திய—இலங்கை உறவை மோசமடையச் செய்தன.

இந்நிலையில் பிரேமா அரசுக்கு எதிரானவர் என்று கருதப்படுபவரும், முன்னர் இலங்கைக்கான இந்தியத் தூதராகப் பணிபுரிந்தவருமான ஜே. என். டிக்ஸித் இந்திய வெளியுறவு அமைச்சின் உயர் பதவிக்கு நியமிக்கப்படவுள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து இலங்கைக்கு எதிராகவே இந்தியா செயற்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

அதன் ஒரு கட்டமாகவே 'சார்க்' மாநாடு குழப்பப்பட்டிருக்கிறது — என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

கொழும்பு 'சார்க்'கில் இந்தியப் பிரதமர் கலந்து கொள்வாரா என்று ஆரம்பம் முதலே கேள்வி எழுப்பப்பட்டு வந்தது.

ஆனாலும் இந்தியத் தரப்பு பின்னர் ஒருவாறு நிலைமையை மாற்றி மாநாட்டில் ஒரு நாள் மட்டும் இந்தியப் பிரதமர் பங்குபற்றுவார் என அறிவித்தது.

எனினும் பின்னர் இந்தியா தனது செல்வாக்கைப் பிரயோகித்து பூட்டான் மூலம், பூட்டான் மன்னரைப் பயன்படுத்தி, மாநாட்டை ஒத்திப்போட வைத்ததாகக் கருதப்படுகிறது.

பூகோள ரீதியிலும் ஏனைய வகைகளிலும் இந்தியாவின் செல்வாக்குக்கு உட்பட்ட நாடுகள் எனக் கருதப்படும் பூட்டான், நேபாளம் ஆகியவற்றினதும் இந்தியாவினதும் தலைவர்கள் கொழும்புக்கு வராததும் —

மாநாடு குழம்பிய பின்னரும் மற்றைய மூன்று நாட்டுத் தலைவர்கள் திட்டமிட்டபடி கொழும்புக்கு விஜயம் மேற்கொள்வதும் இங்கு குறிப்பிடத்தக்கவையாகும்.

ஜனாதிபதி பிரேமதாஸவுக்குப் பாடம் புகட்ட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்த இந்தியா, சார்க் மாநாட்டை அதற்குப் பயன்படுத்தியிருக்கிறது என்பது தெளிவாகின்றது என பி.பி.ஸி தெரிவித்தது.

ஆனால் இதற்காக சார்க்கைப் பயன்படுத்துவது —

தெற்காசியாவில் உள்ள 100 கோடி மக்களின் நலன்களைப் பேண உருவாக்கப்பட்டிருக்கும் சார்க் அமைப்பின் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கி இருக்கிறது என்று மேலும் பி.பி.ஸி தெரிவித்தது.

[உ-எ-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவீரர் நாள் பற்றிய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ 7

மாவீரர் நாள் தொடர்பான கலந்துரையாடல்கள் இன்று வியாழக்கிழமை வடமராட்சியில் வட்டவை பிரதேச ரீதியாக நடைபெற உள்ளன.

இன்று காலை 10-00 மணிக்கு பருத்தித்துறை வட்டவைப் பிரிவினருக்கு புலோலி திரையரங்கிலும்—

பிற்பகல் 2 00 மணிக்கு கரவெட்டி வட்டவைப் பிரிவினருக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும்—

பிற்பகல் 4-00 மணிக்கு வடமராட்சி கிழக்குப் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு நாகர்கோவில் பாடசாலையிலும் கலந்துரையாடல்கள் இடம்பெறும்.

சிற்றூரவைகள், இணக்க மன்றுகள், உற்பத்திக் குழுக்கள், பிரசாரக்குழுக்கள், கலைப் பண்பாட்டு அவைகள், மகளிர் சார்பான அமைப்புகள் மற்றும் பொது அமைப்புகள் இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டுள்ளன. [இ]

## யாழ். நகரில் நடமாடும் கூ. ச. விற்பனை நிலையங்கள்

யாழ்ப்பாணம், நவ. 7

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பாவனையாளர்களின் தேவையைப் பொறுத்து நடமாடும் விற்பனை நிலையங்களையும் நடத்த முடிவு செய்திருக்கிறது.

சங்கத்தின் தலைவர் திரு. கு. இறில் இத்தகவலைத் தெரிவித்தார்.

இதேவேளை தமது சங்கத்தின் ஏழு கிளைகள் இப்போது இரவு நேரங்களிலும் எட்டு மணி வரை திறந்திருந்து பணியாற்றுவதாகவும் அவர் சொன்னார்.

நாவாந்துறை, ஆனைப்பந்தி, அரியாலை, கொழும்புத்துறை, ரயில்வே நிலையத்தடி, குருநகர், கந்தர்மடம் [ஆத்திசூடி] ஆகிய கிளைகளே இரவிலும் இயங்கி வருகின்றன.

ஏனைய கிளைகள் வாரம் ஏழு நாளும் காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, ஆஸ்பத்திரிச் சந்தி, அரியாலை, நீராவியடி ஆகிய கிளைகள் இடம்பெயர்ந்தவர்களுக்குரிய விநியோகத்தைச் செய்வதற்கு விசேட ஒழுங்குகளைச் செய்திருப்பதாகவும் அறியப்படுகிறது. (அ)

## விற்பனையாளர் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 7

யாழ்ப்பாணம், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு உட்பட்ட சகல தனியார், மொத்த, சில்லறை விற்பனையாளர்களுக்கான கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

அத்தியாவசியப் பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு, உணவுப் பங்கீட்டு முறை, குழந்தைகளுக்கான பால் மா விநியோகம் ஆகியவை குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ]

## மாணவர் இயக்க கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 7

பண்டத்தரிப்பு கோட்ட மாணவர் இயக்கத்துக்கான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெறுகிறது.

பண்டத்தரிப்பு கோட்ட மாணவர் இயக்கத்தைச் சேர்ந்த மாணவர் தலைவர்கள், கோட்டத்தொடர்பாளர்கள், தொடர்பாளர்கள், மாணவர் இயக்க உறுப்பினர்கள் ஆகியோர் இக்கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். [இ]

## ஆங்கில ஆசிரியர் கருத்தரங்கு

மல்லிபாய் வலயத்தில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் இக்கருத்தரங்கில் 9 ஆம் ஆண்டு முதல் 11 ஆம் ஆண்டு வரை ஆங்கிலம் கற்பிப்பவர்கள் மட்டுமே கலந்து கொள்வர்.

## முத்திரை வெளியீடும் ரத்து!

சார்க் உச்சி மாநாட்டை ஒட்டி இன்று வெளியிடப்படவிருந்த இரண்டு தபால் முத்திரைகளின் வெளியீட்டு நிகழ்ச்சி ரத்துச் செய்யப்பட்டு விட்டதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதனால் முத்திரைகளை உடனடியாகத் தபால் நிலையங்களுக்குத் திருப்பி அனுப்பி வைக்கும்படி சகல தபால் அதிபர்களையும் அரசு பணித்துள்ளது. [உ-எ]

## பிலிப்பீன்ஸில் சூறாவளி: 2,000 பேர் பலி!

மணிலா, நவ 7

பிலிப்பீன்ஸில் நேற்று வீசிய சூறாவளியில் சுமார் 2 ஆயிரம் பேர் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

பிலிப்பீன்ஸின் மத்திய பகுதியில் சூறாவளி பலத்த சேதத்தை ஏற்படுத்தியது. வெள்ளப் பெருக்கில் சிக்கியே பலர் உயிரிழந்தனர் என்று செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் தெரிவித்தனர். [உ-எ]

## கந்தசஷ்டி இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 7

இன்று கந்தஷஷ்டி விரதம் ஆரம்பமாகிறது. முருகன் ஆலயங்கள் எல்லாவற்றிலும் இந்தவிழா இன்றுமுதல் ஆறு நாட்களுக்கு நடைபெறும். கந்தபுராண படனமும் இவ்வாலயங்களில் நிகழ்த்தப்படும். எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சூரன்போர் விழா நடைபெறும். [அ]

## சஞ்சிகை பற்றிய ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், நவ. 7

இளையோர் திங்கள் இதழான 'சாளரம்' சஞ்சிகை பற்றிய ஆய்வரங்கு ஒன்று நாளை மறுதினம் காலை 9-30 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

கடந்த அக்டோபர் வரையான ஐந்துமாத "சாளரம்" சஞ்சிகைகள் ஆய்வுக்கு உட்படுத்தப்படவிருக்கின்றன. [உ]

## கூட்டுறவுச் சங்க கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ 7

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் பங்கீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ப. நோ. கூ. ச. இயக்குனர் சபை உறுப்பினர்களுக்கும், நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்களுக்குமான கலந்துரையாடல்களை கூட்டுறவுத் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது.

இன்று வியாழக்கிழமை தெல்லிப்பழை, சாவகச்சேரி, கொடிகாமம், பளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சங்கங்களுக்கான கலந்துரையாடல்கள் மேற்படி சங்கங்களில், முறையே காலை 9 மணி, 10 மணி நண்பகல் 12 மணி, பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். [த]

## அகண்ட நாம பஜனை

யாழ்ப்பாணம், நவ. 7

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா சமித்தியினர் ஏற்பாடு செய்துள்ள அகில உலக அகண்ட நாம பஜனை எதிர்வரும் சனிக்கிழமை 9 ஆம் திகதி மாலை 5.15 மணி தொடக்கம் மறுநாள் மாலை 5 30 மணி வரையும் சமித்தி மண்டபத்தில் நடைபெறும். [த]

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ. 7

ஓய்வூதியருக்கான வைத்திய காப்புறுதித் திட்டம் பற்றிய கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். வை. எம். சி. ஏ மண்டபத்தில் நடைபெறும்.

இக் கருத்தரங்கினை ஓய்வூதியர் சங்கங்களின் சம்மேளனம் சிறிலங்கா காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து ஏற்பாடு செய்துள்ளது. (த)

## கிணற்றில் விழுந்து மரணம்

கிணற்றில் விழுந்ததாகக் கூறப்படும் பெண் ஒருவர் காலமானார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் கொக்குவில் மேற்கில் இடம்பெற்றது.

நடராசா சிவஜெயா (வயது 32) என்பவரே இறந்தவர் ஆவார். (இ-15)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் [illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் [illegible] பட்டது.

# கஞ்சிகுடிச்சாறு பகுதியில் 4 தமிழர்கள் சுட்டுக்கொலை!

கிழக்கு மாகாணத்தில் தமிழர்மீது படையினர் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் அம்பாறை மாவட்டத்தில் கஞ்சிகுடிச்சாறு, மகில்ல கிராமங்களைச் சுற்றி வளைத்த படையினர், அங்கு 4 தமிழ் மக்களைச் சுட்டுக் கொன்றுள்ளனர் என்றும்—

அங்குள்ள 15 பொதுமக்களை கைதுசெய்து சித்திரவதை செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தில் புல்மோட்டை, குச்சவெளி பகுதிகளில் சோதனைகள் நடத்திய படையினர் பல தமிழ் மக்களை கைது செய்தனர் என்றும்—

அப்பகுதியில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-8]

## யாழ் நகரப் பகுதியில் 2 ஆயிரம் வர்த்தகர்களில் 250 பேரே விவரம் அறிவிப்பு

யாழ். நகரப் பகுதியில் சுமார் 2 ஆயிரம் வர்த்தகர்கள் உள்ளனர். ஆனால் அவர்களில் சுமார் 250 பேரே தங்கள் வசம் உள்ள அத்தியாவசியப் பொருள்களின் கையிருப்புப் பற்றிய விவரத்தை வெளியிட்டிருக்கின்றனர்!

பாவனையாளர் பாதுகாப்புக் குழுவின் பிரதிநிதி ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.

அத்தியாவசியப் பொருள்களில் அடங்கும் குழந்தைகளின் பால்மா பக்கெட்டுகள் பற்றிய விவரத்தை பல வர்த்தகர்கள் வெளியிடவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

குழந்தைகளின் நலன் கருதி தம்மிடம் உள்ள பால் மா பக்கெட்டுகள் பற்றிய விவரங்களை வர்த்தகர்கள் உடனடியாக தத்தமது பகுதி உதவி அரசாங்க அதிபர்களுக்கு அறிவிக்க வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தார்.

உணவுப் பங்கீட்டுக்காக வர்த்தகர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் பால் மா பக்கெட்டுகளுக்கு உரிய பணம் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார். (உ)

## தீவுப்பகுதி மக்களுக்கு தொடர்ந்து நிவாரணம்

யாழ்ப்பாணம், நவ. 7

வேலணை, புங்குடுதீவு, பூநகரிப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு தொடர்ந்து உலர் உணவு விநியோகிக்குமாறு சம்பந்தப்பட்ட உதவி அரசாங்க அதிபர்களை யாழ். அரச அதிபர் பணித்திருக்கிறார்.

அண்மையில் நடந்த இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து வந்துள்ள தீவக மக்களுக்கு இரண்டு வாரங்களுக்கு மட்டுமே நிவாரணம் வழங்க வேண்டும் என புனர்வாழ்வு அமைச்சு யாழ் அரச அதிபரைப் பணித்திருந்தது என்பதும்—

எனினும் இவர்களுக்கான நிவாரண விநியோகத்தை மேலும் நீடிக்குமாறு அரச அதிபர் புனர்வாழ்வு அமைச்சிடம் கோரிக்கை விடுத்திருந்தார் என்பதும்—

ஆனால் இதுவரை அமைச்சிடமிருந்து பதில் எதுவும் அனுப்பப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தவணைப் பரீட்சை 29 ஆம் திகதியே ஆரம்பமாகும்

யாழ். மாவட்ட பாடசாலைகளில் எதிர்வரும் 13 ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த மூன்றாம் தவணைப் பரீட்சைகள் முன்னர் அறிவிக்கப்பட்டதுபோல் அல்லாமல் இம்மாதம் 29 ஆம் திகதியே ஆரம்பமாகும்.

அதே சமயம், மாணவர்களுக்கான தேர்ச்சி அறிக்கைகள் டிசம்பர் 6 ஆம் திகதி வழங்கப்படும்.

சில பாடசாலைகளில் 3 ஆம் தவணைப் பாடவிதானங்கள் பூர்த்தி செய்யப்படாமல் இருப்பது அதிபர்களால் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்தே யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளரால் புதிய திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. (இ 5)

## லில்லி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பணமும் எடுத்து வரப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

ஆயினும் எடுத்து வரப்பட்ட பொருள்களின் விவரப் பட்டியல் நேற்று மாலைவரை யாழ் செயலகத்துக்கு கிடைக்கவில்லை. (உ-5-165)


## அரசாங்க அறிவித்தல்

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை தற்காலிகமாக இயங்க முடியாமல் இருப்பதால் பொது மக்களின் நன்மை கருதி 9-11-91ஆந் திகதி தொடக்கம் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் பின்வரும் சிகிச்சைகள் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை அறியத் தருகின்றேன்.

| சிகிச்சை | நடைபெறும் நாள் |
|---|---|
| குழந்தைகள் சிகிச்சை | — ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் |
| வாதம் மற்றும் பொது சிகிச்சை | — ஒவ்வொரு வியாழக்கிழமையும் |
| சலரோக சிகிச்சை | — ஒவ்வொரு சனிக்கிழமையும் |

இத்துடன் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் பிற்பகல் 2 மணி தொடக்கம் 4 மணி வரை வெளிநோயாளர் பிரிவுச் சிகிச்சையும் நடைபெறும்.

டாக்டர் ந. கனகசபை,
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

[சி/0882]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org